Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069057

1. District மாவட்டம் : The Nilgiris | PS: காவல்நிலையம் V & AC | Year: ஆண்டு 2026 | FIR No.: மு.த.அ. எண் 3 | Date: நாள் 19.06.2026

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as | Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 7 (A)
(iii) Act சட்டம்: amended by PC (Amendment) Act, 2018 | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை Prior to 18.06.2026 12.00 hrs.
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.06.2026 | Time : நேரம் 10.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Transport Department Unit office, Gudalur. 55 kms West.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Sivakumar | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Huzur Sarishtadar (Excise) | (g) Address : முகவரி In-charge Special District Imposition Cell Officer, District Collectorate, The Nilgiris.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. S. Muthu Narayanan, Superintendent, Transport Department Unit office, Gudalur, & 4 others.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

* FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19/06/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

19-06-2026

15. Date & Time of despatch to the court: 19.06.2026 13.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. Shanmugavadivu.
Rank: நிலை ..... No. எண் .....
Insp. of Police VEAC, Vk Nilgiris.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2026/AC/NI, u/s 7(a) and 7(A) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

இன்று 19.06.2026-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் கோ.சண்முகவடிவு ஆகிய நான், அலுவலகத்தில் இருந்தபோது, நீலகிரி மாவட்டம், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திரு.K.சிவக்குமார் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2026/AC/NI, u/s 7(a) and 7(A) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் கீழ் 11.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அந்த புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் K.சிவக்குமார், தலைமை பொறுப்பாளர் (ஆயம்), உதவி ஆணையர் அலுவலகம், உதகமண்டலம், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி. அம்மையீர், பொருள்: திடீர் சோதனை - போக்குவரத்து துறை பகுதி அலுவலகம், கூடலூர், நீலகிரி மாவட்டம் - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. நான் நீலகிரி மாவட்டம், உதவி ஆணையர் அலுவலகத்தில் தலைமை பொறுப்பாளர் (ஆயம்)-ஆக பணியாற்றி வருகிறேன். நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் என்னை சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக உத்தரவு எண்.A1/Pdl.30/2026, நாள்:18.06.2026-ன்படி நியமித்திருந்தார். எனக்கு கூடலூர், போக்குவரத்து துறை பகுதி அலுவலகத்தில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு ஓட்டுநர் உரிமம், புதிய வாகனத்திற்கு பதிவு எண், பெயர் மாற்றம் செய்ய, வாகனங்களுக்கு தகுதி சான்று மற்றும் மோட்டார் வாகன அலுவலகம் சம்மந்தமான பணிகளுக்கு வரும் நபர்களிடம், கூடலூர் போக்குவரத்து துறை பகுதி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் தாங்கள் செய்து கொடுக்கும் பணிகளுக்கு பொதுமக்கள், ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம்

கையூட்டு பெறுவதாக நம்பகமான ரகசிய தகவல் கிடைக்கப்பெற்றது. அதன்படி கூடலூர் போக்குவரத்து துறை பகுதி அலுவலகத்தில் மதியம் சுமார் 12.00 மணியிலிருந்து மாலை சுமார் 19.00 மணிவரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. நான் நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினருடன் காலை சுமார் 10.00 மணிக்கு புறப்பட்டு, மைசூர் செல்லும் சாலையில் மாக்கமூலா பகுதியில் கிழக்கு பார்த்தவாறு அமைந்துள்ள போக்குவரத்து துறை பகுதி அலுவலகத்திற்கு செல்லும் வழியில் சந்தேகத்திற்கு இடமாக நின்றுகொண்டிருந்த TN 09 AS 0657 என்ற மாருதி 800 காரில் அமர்ந்திருந்த பெண்ணை அழைத்துகொண்டு மதியம் சுமார் 12.00 மணிக்கு போக்குவரத்து துறை அலுவலகத்திற்குள் நுழைந்து, வரவேற்பறையின் வலது புறம் இருந்தவர்களை இருக்கைகளில் அமரச்சொல்லி, அழைத்து வந்த பெண்ணையும் அமரச்சொல்லி பின்னர் அலுவலகத்தை பார்வையிட்டபோது, அலுவலகத்தின் இடதுபுறத்தில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை எண்.1 அறையில் யாரும் இல்லை. அந்த அறையின் அருகில் இடது பக்க அறையில் இருந்த நபரை விசாரிக்க தனது பெயர் M.அய்யனார் என்றும், தான் இந்த அலுவலகத்தில் 2023 ஆகஸ்ட் முதல் BONTON நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் Software Operator-ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் கைப்பற்றும்படியான பணமோ, பொருளோ இல்லை. அவரிடம் அலுவலகத்தில் வேறு அலுவலர்கள் யாரும் இல்லையா என்று கேட்க, கண்காணிப்பாளர் மட்டும் இருப்பதாக தெரிவித்து, அவரது அறையை காண்பித்தார். கண்காணிப்பாளர் அறைக்கு சென்று அவரிடம் நானும், காவல் ஆய்வாளர் அவர்களும் மற்றும் காவல் குழுவினரும் அடையாள அட்டைகளை காண்பித்து அறிமுகம் செய்துகொண்டு உடைமைகளை காண்பித்தும், கூடலூர் போக்குவரத்து துறை பகுதி அலுவலகத்தை எனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் திடீர் தணிக்கை செய்ய வந்திருக்கும் விபரம் தெரிவிக்கப்பட்டது. பின்னர் அவரை விசாரிக்க அவரது பெயர் ச.முத்து நாராயணன் என்றும், தான் 09.01.2026-ம் தேதி முதல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களைப்பற்றி விசாரிக்க, திரு.M.அருண் சிவகுமார் என்பவர் நீலகிரி Enforcement பணியில் இருந்துகொண்டு, அவர் 01.12.2024-ம் தேதி முதல் மோட்டார் வாகன

ஆய்வாளர் நிலை.2-ல் மாற்றுப்பணியில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் திரு.அருண் சிவக்குமார் அவர்கள் வாரத்தில் செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் மட்டும் கூடலூர் அலுவலகத்திற்கு வருவார் என்று தெரிவித்தார். பின்னர் அவரை சோதனை செய்ய, அவரிடம் கைப்பற்றும் படியான பணமோ, பொருளோ இல்லை. பின்னர் காரிலிருந்து அழைத்துவரப்பட்ட பெண்ணை விசாரிக்க, தன்னுடைய பெயர் P.சோனியா என்றும், தான் பிரபாஸ் ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் பெண்களுக்கு இருசக்கர வாகனம் ஓட்டுநர் பயிற்சி அளித்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் காவல் ஆய்வாளர் அவர்கள் பணம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்க, அவர் தானாக முன்வந்து அவரது காரில் இருந்து ஒரு பர்ஸை எடுத்து வந்து ஆஜர் செய்தார். அந்த பர்ஸில் ரூ.17,500/- இருந்தது. அந்த பணம் போக்குவரத்து துறை பகுதி அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க வந்த பணமாக இருக்கக்கூடும் என விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரின் காரில் இருந்த திரு.சான் என்பவரின் ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் விண்ணப்பத்தின் நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தில் இருந்த R.பெரியண்ணன் என்பவரை விசாரிக்க, இரண்டு மாதத்திற்கு முன்பு தனக்கு இருசக்கர வாகன உரிமம் எடுத்தபோது, தன்னுடைய புகைப்படத்திற்கு பதிலாக வேறொருவருடைய புகைப்படம் பதியப்பட்டிருந்ததை, சரிசெய்ய வந்ததாக தெரிவித்து, ஓட்டுநர் உரிமத்தை காண்பித்தார். அவரை சோதனை செய்ய தன்னுடைய உள்பக்க இடதுபக்க ட்ரவ்சர் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.24,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க, அவர் கூறிய விளக்கம் முன்னுக்குப்பின் முரணாக இருந்ததால், அந்த பணம் ரூ.24,000/- விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க தன்னுடைய பெயர் வினோத்குமார் என்றும் தான் கூடலூரில் பகவதிஸ் என்ற ஓட்டுநர் பயிற்சி பள்ளியை நடத்தி வருவதாக தெரிவித்தார். மேலும் அவரிடமிருந்த கோப்புகளை பற்றி விசாரிக்க, ஓட்டுநர் உரிமங்கள் காலாவதியாகிவிட்டதால், மொபைல் நம்பரை அப்டேட் செய்ய வந்திருப்பதாக தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்ய தன்னுடைய பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து கத்தையாக ஒரு கட்டை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை நான் எண்ணிப்பார்க்க அதில் மொத்தம் ரூ.22,290/- இருந்தது. அந்த பணம்

குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, சரியான முகாந்திரம் கூறாததாலும், அவர் கூறிய விளக்கம் ஏற்கதக்க வகையில் இல்லாததால், அந்த பணம் ரூ.22,290/- செயல்முறை நடவடிக்கையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் அவரது பயிற்சி பள்ளி அலுவலகத்தில் இதுபோன்று பணம் ஏதாவது உள்ளதா என்று விசாரிக்க, இந்த வாரம் மோட்டார் வாகன பிரிவு அலுவலகத்திற்கு கொடுக்க அலுவலகத்தில் பணம் வைத்திருப்பதாக என்னிடம் தெரிவித்தார். மேலும் அவருடைய அலுவலகத்தில் தற்போது திருமதி.ஹரிதா மற்றும் செல்வி.சிவகாமி பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் சுமார் 13.45 மணிக்கு திரு.வினோத்குமார் அவருடைய செல்போன் எண்.9487512507-லிருந்து, செல்வி.சிவகாமியின் செல்போன் எண்.9363707221-ல் தொடர்புகொண்டு, நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலர்கள் ஓட்டுநர் பயிற்சி பள்ளிக்கு வருவார்கள் எனவும், அவர்களிடம் தன்னுடைய பெர்ஷனல் பேக்கில் வைத்துள்ள பணத்தை எடுத்து கொடுக்குமாறும் தெரிவித்தார். பின்னர் போக்குவரத்து துறை அலுவலகத்தில் கையில் கோப்புகளுடன் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் K.ரவிச்சந்திரன் என்றும், புஷ்பா ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய, தனது பேண்டின் முன்பக்க வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.3,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து விளக்கம் கேட்க, அவர் கூறிய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால், செயல்முறை நடவடிக்கையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் காவல் ஆய்வாளர் போக்குவரத்து துறை பகுதி அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருக்கு தகுந்த அறிவுறை வழங்கி தன்னுடன் தலைமைக் காவலர் 953 திரு.H.R.பீம்சிங் மற்றும் முதல்நிலை காவலர் 721 திரு.L.ராஜேஷ்குமார் ஆகியோருடன் பகவதிஸ் பயிற்சி பள்ளிக்கு சென்றபோது, அந்த பயிற்சி பள்ளியில் இருந்த பெண் ஊழியர்கள் திருமதி.ஹரிதா மற்றும் செல்வி.சிவகாமி ஆகியோர் ஆஜர் செய்த பணம் ரூ.36,300/-ஐ விசாரணைக்காக கைப்பற்றி வந்தனர். திடீர் சோதனையின்போது இடைத்தரகர்களான திரு.வினோத்குமார், திருமதி.சோனியா, திரு.ரவிச்சந்திரன் மற்றும் திரு.பெரியண்ணன் ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,03,590/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திடீர் சோதனை செயல்முறை நடவடிக்கை ஆகியவற்றை

இத்துடன் இணைத்துள்ளேன். 18.06.2026-ம் தேதி திடீர் சோதனையின் போது கூடலூர் போக்குவரத்து துறை பகுதி அலுவலகத்தில் பணியில் இருந்த சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஒப்பம் K.சிவக்குமார் உதகமண்டலம், 19.06.2026. Submitted: I have received a complaint from Tr.K.Sivakumar, Husur Sarishtadar (Excise), In-charge Special District Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam, the Nilgiris on 19.06.2026 at 11.00 hrs and registered a case in Nilgiris Vigilance and Anti-Corruption Cr.No.3/2026 u/s 7(a) and 7(A) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 Sd(xxx) G.Shanmugavadivu 19.06.2026 Inspector of Police, Vigilance and Anti-Corruption, The Nilgiris.

Original FIR along with original written complaint of Tr.K.Sivakumar, Husur Sarishtadar (Excise), In-charge Special District Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam, the Nilgiris is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Principal District and Sessions Court, Udhagamandalam and copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

19-06-2026

(G.SHANMUGAVADIVU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
The Nilgiris.